மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 81, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

81—

பேருந்து வசதி

***31359—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு ஊராட்சி ஒன்றியம், புலியூர்குறிச்சி ஊராட்சி, கீழஉப்பூரணிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கீழஉப்பூரணிக்கு தற்போது இயக்கப்படும் பேருந்துகளே அந்தப் பகுதி மக்களின் தேவைக்குப் போதுமானதாக உள்ளது. மேற்கொண்டு பயணிகளுடைய அடர்வு அதிகமாக இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, புதிய பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி மக்கள் பயன்பெறும் வகையில் நாங்குநேரியிலிருந்து தாழைக்குளம், சிறுவரமங்கையபுரம், மீனவன்குளம், தெற்கு மீனவன்குளம், கள்ளிக்குளம், கீழதுவரங்குளம், மேலதுவரங்குளம், கள்ளிசத்திரம், பெருமாள்குளம், புத்திசுத்தி, கல்லடிசிதம்பரபுரம், தேவநல்லூர்மேலூர், தேவநல்லூர்கீழூர், மேலகாடுவெட்டி, மேலசடையன்குளம்,*

2016 பிப்ரவரி 19]

கீழசடையன்குளம், கீழஉப்பூரணி வழியாக சேரன்மகாதேவிக்கு நகரப் பேருந்து இயக்கும்பட்சத்தில், அதன் மூலமாக 12 ஊராட்சிகளைச் சார்ந்த 20,000-க்கும் மேற்பட்ட மக்கள் பயன்பெறுவார்கள். மேலும், இவ்வழித்தடத்தில் நாங்குநேரிக்கு நேரடியாகப் பேருந்து வசதி இல்லை. இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்கப்படும்பட்சத்தில், நாங்குநேரி தாலுகா அலுவலகம் சென்று வருவதற்கு மக்களுக்கு வசதியாக இருக்கும். மாண்புமிகு அம்மா அவர்களது அரசில், நாங்குநேரியிலிருந்து கீழஉப்பூரணி வழியாக சேரன்மகாதேவிக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மேலும், நேற்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது, மாட்டுவண்டி செல்லும் சாலையில்கூட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பேருந்து இயக்கிக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆகவே, எனது கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, கண்டிப்பாக இந்தப் புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்குவதற்கு ஆவன செய்து தர வேண்டுமாய்க் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கீழஉப்பூரணிக்கு இப்போது 12 நடைகளில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அந்த 12 நடைகளில், 35 சதவீதம் மக்கள்தான் பயணம் செய்து கொண்டிருக்கின்றார்கள். கீழஉப்பூரணிக்கு அருகில், இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் சடையன்குளம் இருக்கின்றது. அதோடு சாலை முடிகின்ற காரணத்தினால், இப்போது இருக்கின்ற பேருந்து வசதியே போதும் என்று நான் குறிப்பிட்டேன்.*

நாங்குநேரியிலிருந்து சேரன்மகாதேவி வழியாக கீழஉப்பூரணிக்கு இப்பொழுது பேருந்து வந்து கொண்டிருக்கின்றது. அந்த ஊரினுடைய மக்கள்தொகையே ஆயிரம் பேர்தான். அந்த ஊரிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரம் சென்றால், சாலை

முடிகின்றது. இப்போது அதுவரை பஸ் சென்று கொண்டிருக்கின்றது. ஆகையால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற ஊருக்குப் போதுமான பஸ் வசதி இருக்கின்றது என்பதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள பிற ஊர்களுக்கும் பேருந்து தேவைப்பட்டால், அதுகுறித்து தனியாகக் கோரிக்கை வைத்தால், மாண்புமிகு அம்மா அவர்களது கவனத்திற்கு அது எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும். மேலும், மாட்டுவண்டி போகின்ற பகுதியிலேகூட மாண்புமிகு அம்மா அவர்கள் தார்ச் சாலை அமைத்து, புதிய பேருந்துகளை இயக்கியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆம்பூர் தொகுதிக்குட்பட்ட மாதனூர் ஒன்றியத்தில் நாயக்கனேரி, காமனூர்தட்டு, பனங்காட்டு ஏரி ஆகிய மலைக் கிராமங்கள் உள்ளன. இவை ஆம்பூர் நகரத்திலிருந்து 18 கிலோ மீட்டர் உயரத்திலுள்ளன. மேலும், இங்கே 10-க்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் இருக்கின்றன. 5,000-க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். ஆனால், அந்த மலைக் கிராமத்திற்கு போக்குவரத்து வசதி கிடையாது. தனியார் சிற்றுந்து மட்டும்தான் இயக்கப்படுகிறது. அதைக்கூட, வாரத்தில் ஓரிரு நாட்கள்தான் இயக்குகிறார்கள். மாணவர்கள் பள்ளிக்கூடத்திற்கு வர வேண்டுமென்று சொன்னால், காட்டுப் பாதை வழியாகத்தான் இறங்கி வருகிறார்கள். தொழிலாளர்கள் வேலைக்கு வர வேண்டுமென்று சொன்னாலும்கூட, காட்டுப் பகுதி வழியாகத்தான் இறங்கி வருகின்றார்கள். ஆகவே, அந்த மலைக் கிராமத்திற்கு அரசின் சார்பாக சிற்றுந்து இயக்கித் தர வேண்டுமாய் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

2016 பிப்ரவரி 19]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கின்ற வழித்தடமானது, மலைப் பகுதியாக இருக்கின்றது. அந்தப் பகுதியில் சாலை வசதி நன்றாக இருக்கும் என்று சொன்னால், மலைப் பேருந்து, சிற்றுந்து இருக்கின்றது. குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல சிரமம் ஏற்படுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

82—

கூடுதல் கட்டடம்

***52384—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டியிலுள்ள வணிக வரி மற்றும் சார்பதிவாளர் அலுவலகங்களுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருத்துறைப்பூண்டி வணிக வரி அலுவலகம் தற்போது தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இவ்வலுவலகத்திற்கு அரசுக் கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக நிலம் தேர்வு செய்வது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தேவையான நிலம் தேர்வு செய்யப்பட்டவுடன், திருத்துறைப்பூண்டி வணிக வரி அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.